முச்சந்தி முரளி





Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 281

திங்கட்கிழமை
02 செப்ரெம்பர் 2024

ஆவணி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## அரோகரா கோஷம் வான்முழங்க அலங்காரக் கந்தன் தேர்ப்பவனி

யாழ்ப்பாணம், செப். 2
'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை லட்சக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் பக்திபூர்வமாகவும், சிறப்பாகவும் இடம்பெற்றது.
நேற்றுக் காலை மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள வேற்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் இடம் 09



## பலாலியில் 'இண்டிகோ'

யாழ்ப்பாணம், செப். 2
சென்னைக்கும் பலாலிக்குமிடையேயான 'இண்டிகோ' எயார் லைன்ஸ் நிறுவனத்தின் புதிய விமான சேவை நேற்று ஆரம்பமானது.
தினந்தோறும் சென்னையிலிருந்து பலாலிக்கு விமான சேவை நடத்தப்படவுள்ளதாக 'இண்டிகோ' எயார் லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.
யாழ். பலாலிக்கு தினசரிவிமானசேவையை இந்தியாவின் அலையன்ஸ் எயார் ஏற்கனவே நடத்துகிறது. இந்த நிலையில் மற்றொரு சேவையாக இண்டிகோவும் பயணத்தை 11

# சஜித்துக்கே ஆதரவு: தமிழரசுக்கட்சி முடிவு!!

### அரியநேந்திரன் தேர்தலிலிருந்து விலகவேண்டும் சுமந்திரன் எம்.பி. அறிவிப்பு

**வவுனியா, செப்ரெம்பர் 2**

**ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவேண்டுமெனவும், பொது வேட்பாளர் அரியநேந்திரன் போட்டியில் இருந்து விலகவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.** 11

## தமிழரசுக் கட்சிக்கு சஜித் நன்றி!



யாழ்ப்பாணம், செப். 2
ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தனக்கு ஆதரவளிக்கத்தீர்மானித்துள்ளமைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்பிரேமதாஸ நன்றியைத் தெரிவித்துள்ளார். 09

## நாட்டைப்பிளவுபடுத்தும் கருத்துகளை முன்வைக்கின்றனர் வேட்பாளர்கள்

### தான் அப்படிச் செய்யவில்லை என்கிறார் சஜித் பிரேமதாஸ

யாழ்ப்பாணம், செப். 2
13 ஆவது திருத்தம் தொடர்பாக பல தடவைகள் நான் உறுதிமொழி வழங்கியுள்ளேன். தேர்தல் அறிக்கையிலும் அதை உள்ளடக்கியுள்ளேன். தற்பொழுதுள்ள ஜனாதிபதி வேட்பாளர்கள் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் பலதரப்பட்ட கருத்துகளை மக்களுக்கு முன்வைக்கின்றார்கள். 11

## சஜித்தை ஆதரிக்கும் தீர்மானம்: என்னுடன் ஆலோசிக்கப்படவில்லை

### கட்சித் தலைவர் மாவை. போர்க்கொடி

யாழ்ப்பாணம், செப். 2
ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு முடிவு எடுத்துள்ளதாக வெளிவந்த அறிவிப்பு ஆச்சரியமாக இருக்கின்றது. இந்த முடிவு தொடர்பில் என்னுடன் கலந்தாலோசிக்கவில்லை என கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.
கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தொடர்பில் மாவை.சோ.சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:-
உடல்நலக் குறைவு காரணமாக மத்திய குழுக் கூட்டத்தில் நான் பங்கேற்க 11

## ரணிலுக்காக 'குத்திமுறிந்த' தமிழ் - முஸ்லிம் எம்.பி.க்கள்

வவுனியா, செப். 2
ஜனாதிபதி வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் 11

### சிலிண்டருக்கு வாக்களிக்காவிட்டால்

## சிலிண்டரும் வெடிக்கும் இந்த நாடும் வெடிக்கும்

வவுனியாவில் வைத்து ரணில் தெரிவிப்பு
அரசியல் தீர்வு குறித்து மௌனம்

**விரிவு :- பக். 11**

## மத்திய குழுக் கூட்டத்துக்கான அழைப்புக் கிடைக்கவில்லை

### போதிய முன் அறிவித்தலும் வழங்கப்படவில்லை எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 2
மத்திய குழுக் கூட்டத்துக்கான அழைப்பிதழ் எனக்குக் கிடைக்கவில்லை. இது தொடர்பில் கட்சியின் செயலருக்கும் சுட்டிக்காட்டியுள்ளேன் - இவ்வாறு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. 11

### தபால்மூல வாக்களிப்புக்கு முன்னதாக

## முடிவெடுக்கவேண்டிய கட்டாயம் எமக்கு!

### விளக்கம் கொடுக்கிறார் சத்தியலிங்கம்

யாழ்ப்பாணம், செப். 2
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நாளை மறுதினம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னதாக முடிவு எடுக்கவேண்டும் என்பதாலேயே அவசரக் கூட்டமாக மத்திய குழுக் கூட்டம் நடத்தப்பட்டது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். ஒப்பந்தங்களை ஆட்சிமாற்றம் பாதிக்காது!

## அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, செப்.2

ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கிசையில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஆட்சியாளர் கொடுக்கல் வாங்கல்களைமேற்கொள்ள விரும்புகின்றார்களே தவிர புதிய வர்த்தகங்களை உருவாக்குவதற்கு விரும்பவில்லை. விருப்பமான இடங்களில் வணிகங்களை ஆரம்பிப்பதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உதவி செய்யும். நாம் அரசாங்கத்தை மாற்றுவதற்கு அல்ல. இந்த நாட்டின் அபிவிருத்தி செய்வதற்கே வாய்ப்பைக் கோருகிறோம். சர்வதேச நாணய நிதியம் ரணிலுடன் எந்த ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. அதன் ஒப்பந்தங்கள் அனைத்தும் இலங்கை அரசுடனே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆட்சிமாற்றம் ஏற்பட்டால், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. எனவே, தாம் இல்லை என்றால் நாடு மீண்டும் பாதாளத்துக்குச் சென்றுவிடும் என ரணில் கூறுவது முற்றிலும் பொய்யான கருத்தாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



## ரணிலின் பதாகைகள் பொலிஸார் அகற்றம்!

வவுனியா, செப்.2

வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பதாகைகள் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அகற்றப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஈடுபடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவுக்குச் சென்றிருந்தார்.

இந்தநிலையில் குறித்த பதாகைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தருவதற்கு முன்பாகவே பொலிஸாரால் அகற்றப்பட்டது. (ச-ரி-110)

## நாட்டை மீட்கின்ற தலைவரே தேவை

### ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், செப்.2

நாட்டை முழுமையாக மீட்டெடுக்கவும், மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்கவும் மக்கள் தகுதியான ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கோத்தபய ராஜபக்சவின் மோசமான ஆட்சியின்போது ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் நாடு பாதிக்கப்பட்டது. நாட்டை மீட்டெடுப்பதற்கான திட்டங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை.

தமிழ்மக்கள் ஏமாந்து விடக்கூடாது. மிகவும் நொந்துபோன ஒரு சமூகமே எம் தமிழ்ச் சமூகம். இன்று உரிமைகளைப் பற்றி பேசுகின்றவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆனால், இன்று மீனவர்களும், போரால் பாதிக்கப்பட்டவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே மக்களாகிய நீங்கள் நாட்டுக்குத் தகுதியான ஜனாதிபதி யார் என்பதை தெரிவு செய்யவேண்டும் - என்றார். (ச-56)

## நன்றி உணர்வுடன் தீர்மானம் எடுங்கள்

### நிமால் லான்சா தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

வீழ்ந்த நாட்டைப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மீட்டெடுத்தார். அதனை நினைவில் கொண்டு நன்றியுடன் தேர்தலின்போது முடிவெடுங்கள்.

-இவ்வாறு ஜாஎல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபரப்புரைக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால்லான்சாதெரிவித்தார்.

வீழ்ந்த நாட்டை இரண்டாண்டுகளில் மீட்டவர் யார்? அவர்தான் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க.

நாடு வீழ்ந்தபோது அநுரவுக்கும் சஜித்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் வந்தார்களா? அதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். எரிபொருள், எரிவாயு, உரம், மருந்து என எதுவுமே இல்லாமல் இருந்தபோது நமக்காக யார் முன்வந்தார்கள் என்பதை நினைவு கொள்ளுங்கள். நாட்டைமீட்க அனுபவமும் திறமையும் இருக்கவேண்டும். இரண்டு வருடங்களுக்குமுன் நாட்டின் நிலைமையை நாம் அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வெல்வது நானே!

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, செப்.2

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மொட்டுக் கட்சியின் வெற்றி உறுதியாகிவிட்டது என்று பொதுஜன பெரவினவின் வேட்பாளர் நாமல் ராஜபக்சதெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு சட்டத்தையும் நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டோம். மாகாண சபைகளுக்கு எந்தவகையிலும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது. அரச ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படும். சம்பள முரண்பாடுகள் களையப்படும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு நீண்டகால அடிப்படையில் தீர்வு வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



# விவசாயப் பெருமக்களுக்கு பல்வேறு சலுகைகள்!

## உறுதியளிக்கிறார் சஜித்

கொழும்பு, செப்.2

நாட்டின் பாரம்பரிய விவசாயச் செய்கையைப் பாதுகாப்பதற்கு விவசாயிகளுக்கு பல சலுகைத் திட்டங்கள் எமது அரசாங்கத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மதவாச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

50 கிலோ கிராம் நிறையுடைய உரமூடை ஒன்று 5,000 ரூபாவுக்கு விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும்.

இந்தச் சலுகை கறுப்புச் சந்தையூடான வர்த்தகர்களுக்கு வாய்ப்பளிக்காமல், சகல விவசாயிகளையும் சென்றடையும் வகையில் ஏற்படுத்திக்கொடுக்கப்படும். 'கியூ. ஆர்' குறியீட்டு முறைமையின் ஊடாக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளின் உற்பத்திகளுக்குச் சிறந்த விலை பெற்றுக்கொடுக்கப்படும். விவசாயக் கடனை இரத்துச் செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வாக்குறுதிகள் அனைத்தும் வாய்ப்பேச்சு போன்றதல்ல என்றும் தெரிவித்தார். (ச)

### வெற்றியாளர் யார்?

## கட்சி தாவியோர் நடுத்தோணியில்

கொழும்பு, செப்.2

பல்வேறு சலுகைகள் மற்றும் வாக்குறுதிகளின் அடிப்படையில் கட்சி மாறிய உறுப்பினர்கள் பலர் மௌனமாக இருப்பதாகவும் அவர்கள் ஏற்கனவே இருந்த குழுவில் சேர முயற்சிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிலங்கை அரசியலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வெற்றியாளர் யார் என்பது தொடர்பில் பல்வேறு குழப்பநிலையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சி மாற இணக்கம் தெரிவித்த சில உறுப்பினர்கள் தங்கள் தொலைபேசி எண்களையும் மாற்றிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கட்சி மாறிய பெரும்பான்மையான உறுப்பினர்கள் மீண்டும் அரசியலுக்கு வருவதில்லை என தீர்மானித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூரான் சிறப்பம்சம்

## தமிழ்மணக்கும் பன்னிரண்டு தோளன்

சேவலாம் கொடியும் மயில் நீலவாகனமுங்கொண்ட
தீரமிக்க கந்தன் அரு ளாளன் - நல்லூர்
ஆலயத்தைத் தேடிவந்த தாளன் - அவன்
வேலும் முகம் ஆறும் திரு நீறும் முது சூரன்குடி
வெற்றிகொண்ட தோள்வியும் பாடு!- வினை
முற்றமணு காதுபறந் தோடும்!
பாவலர் தொடுக்குந்தமிழ் மாலையே மணக்குந்திரள்
பன்னிரண்டு தோளன்முரு சேகன் - அவன்
என்னிரண்டு கண்களுக்குள் வாசன் - துதி
பாடுமன்ப ரோடுகலந் தாடுவதும் பாடுவதும்
பாவவினை போக்குமிது திண்ணம் -உனைத்
தேவனென ஆக்குமருள் வண்ணம்!

▪ கவிஞர் சோ.பத்மநாதன்

## தீர்த்தமாடும் அழகனை காண வாரீர்



நல்லை நகர் நாயகனாம் எங்கள்
நல்லைக் கந்தனின் தீர்த்தத் திரு
நாள் காண வாரீர்!

தீர்த்தமாடும் வேலனின் திருமேனி அழகு
தனைகண்ணாரக் கண்டு களிப்புடன்
பாரீர்!

மெய்யுருகி பாவிசைத்துப் பொருள் கூறி
மெஞ் ஞானச் சுடரான முருகன் புகழ் கேளீர்!

வடிவேலன் கழல் பணிந்து பாதமலர் தூவி
வடிவான எங்கள் முருகனின் திருமுகம் காணீர்!

அழகழகாய் ஆடை அணிந்து அற்புதமாய் காட்சி
தரும்அழகன் குமரனின் அருளாசியினைப்
பெறுவீர்!

▪ திருமதி மிஷாந்தி ஜெயசிங்கம்

## அருள் பொழியும் முருகா

நல்லை நாளில் அமர்ந்து அருள் பொழியும் முருகா
உன் அழகருக்கு ஈடு உலகில் ஏதுமுண்டோ முருகா
பக்தர் மனங்களில் உறைந்திடும் முருகா
அவர் தம் வினைகள் போக்கிடும் முருகா
வெள்ளி மயில் ஏறிவரும் முருகா
வள்ளி தெய்வானையுடன் காட்சி தரும் முருகா
ஆறுமுகனான வரும் தேவசேனாதிபதியே முருகா
சூரனை சங்காரம் செய்த மூவீர முருகா
அள்ளி எமக்கருள் தந்திடும் நல்லூ ர் முருகா
உனை வேண்டி உன்பதி வந்தோம் அருள் தா முருகா
சுற்றி வரும் பகை விரட்டி காத்திடு முருகா
பக்தர்கள் வினைபோக்க வேலுடன் வருவாய் குமரா
முருகா

▪ நாகலிங்கம் தங்கவேல்



## நல்லூர் முருகா நலம் அருள்வாய்

எல்லா நிலையிலும் நம்மக்கள்
எதிரும் புதிருமாயிருந்தால்
சொல்லரும் துன்பங்கள் சேர்ந்து வரும்
சோதனை இதுபோல் இருக்கலாமோ?

ஒற்றுமை ஒன்றே உயர்வாகும்
உள்ளத்தில் இதனை நிறுத்த வைப்பாய்
வேற்றுமை பேசிப் பிரிவதனால்
வேதனை தானே மிஞ்சி நிற்கும்!

அன்பே கொண்டு நாமெல்லாம
அதிக ஒற்றுமை கொள்ள வைப்பாய்!
இன்பம் அதிலே தான் இருக்கு
என்பதை உண்ர்ந்து வாழ வைப்பாய்!

▪ சிவன் மீசாலை

## விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் இல்லையடி

நல்லூரை வலம் வந்தே ஞானத்தங்கமே!
நாங்கள் விழுந்து கும்பிட்டாலடி
வில்லங்கம் வராதடி ஞானத்தங்கமே!
விடிவொன்றை நல்லூரான் தருவானடி
எல்லாம் தருவானடி ஞானத்தங்கமே!
எங்களுக்கு நல்லூரான் காவலடி
பொல்லாப் பொன்றும் இல்லையடி
ஞானத்தங்கமே!
பொற்கோவில் வலம் வந்து விழுந்து
கும்பிட்டாலடி வில்லங்கம் இல்லையடி

▪ மதுரகவி

## பூமி இனித்தாங்காது

சண்டித்தனமும், சல்லாபமும் நாட்டில்
சாதாரண நிகழ்வாகிவிட்டது முருகா!
சத்தியம் சமத்துவம் நாட்டில்
அசாத்தியமாகி விட்டதே முருகா!
பெண்களைத் தாயாகப் பார்க்காமல்
பூந்தோட்டமெனப் பறிக்கின்றனரே!
பூமி இனித்தாங்காது முருகா!
புயலாக எழுந்து தண்டித்து விடு!

▪ கே.எஸ்.சிவஞானராஜா






வானளாவிய சப்பரத்தில் நல்லூர்க் கந்தன்



யாழ்ப்பாணம், செப்.2
வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் 23ஆம் நாள் மாலைத் திருவிழாவான சப்பரத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. (ரி-66)



## நல்லூரில் குருதிக்கொடை

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இரத்தான முகாம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை நடைபெற்றது.
இரத்ததான முகாம் நாளை செவ்வாய்க் கிழமை பூங்காவனத் திருவிழா வரை இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்.சுகந்தனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது!



வவுனியா, செப்.2

2024 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் உயர்விருது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்.சுகந்தனுக்கு வழங்கப்படவுள்ளதாக தமிழ்நாடு கோவையில் இயங்கும் சேரன்மாதேவி உலக சாதனை புத்தக நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொன்.சுகந்தனின் 50 ஆவது வயதிலேயே அவரின் வரலாறு பன்னிரண்டு புத்தகங்களாக அவரது பல்துறை சார்ந்த ஆளுமைகளின் வெளிப்பாடாக வெளிவருவதன் காரணமாகவே இந்த உயரிய விருது வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்.சுகந்தன் பிரபல பேச்சாளர் மட்டுமன்றி எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், பாடலாசிரியர், நடிகர், ஓவியர் எனப் பல்துறைகளிலும் பங்களிப்பாற்றி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-27)



# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ. உமாமகேஸ்வரன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனனால் கௌரவிக்கப்பட்டார். (ச-45)

# நல்லூர்த் திருவிழா 25ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் இன்று திங்கட்கிழமைவரை சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று 25ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க , முல்லைத்தீவு உருத்திரபுரீஸ்வரர் ஆலய பிரதம குரு சாமஸ்ரீ தேசமான்ய சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன், சிறப்பு அதிதியாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், கௌரவ அதிதியாக வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் செ. கந்த. சத்தியதாசன் மற்றும் முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். வசந்தபுரம் பாரதி அறநெறிப் பாடசாலை, கீரிமலை சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலை, நகுலேஸ்வரம் குழந்தைவேல் சுவாமி அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை சிவன் அறநெறிப் பாடசாலை , நீலியம்பனைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறநெறிப் பாடசாலை, இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக உரும்பிராய் ஜெயானந்த ஜீவ நர்த்தனாலய இயக்குநர் முதுகலைமாணி ஜீவிதா ஆனந்தராசா மற்றும் மாணவர்கள் வழங்கும் 'சண்முக சமர்ப்பணம்' மற்றும் சகோதரிகள் ராகவி பிரசன்னா, ஜானவி பிரசன்னா இணைந்து வழங்கும் 'இசைக் கச்சேரி' நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-45)

# உயிராபத்தான தென்னைகள்

## தறிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 2

உரும்பிராய் கிழக்குப் பகுதியில் பக்கத்துக்கு காணியிலுள்ள தென்னைகளிலிருந்து எமது வீட்டின் மேலாக விழும் தேங்காய்கள் வீட்டின் கூரையை சேதப்படுத்துகின்றன. அத்துடன் அவை எந்நேரமும் முறிந்து விழும் நிலையிலும் காணப்படுகின்றன. இந்த ஆபத்தான தென்னைகளை தறிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வீட்டின் உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காற்று, மழைகாலங்களில் குறித்த தென்னைகள் சரிந்து வீழ்ந்து உயிராபத்தை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்தபோது, "தென்னை மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு மறுக்கும் பட்சத்தில் தென்னை மரங்களால் ஏற்படும் அனர்த்த பாதிப்புக்கு தென்னை மர உரிமையாளரே பொறுப்புடையவர்" என்றும் அறிவுறுத்தப்பட்டது. எனினும் அவை இன்னமும் அகற்றப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த தென்னைகளை தறித்து உயிராபத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வீட்டின் உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

# வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், செப்.2

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி- துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய குரோதி வருட மஹோற்சவப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 09.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 17 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவப் பெருவிழா சிறப்பாக நடைபெறும்.

மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 9 ஆம் ஆம் திகதி திங்கட்கிழமை குருக்கட்டு விநாயகர் தரிசனமும், 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெண்ணெய்த் திருவிழாவும், 11 ஆம் திகதி புதன்கிழமை துகில் திருவிழாவும், 12 ஆம் திகதி வியாழக்கிழமை பாம்புத் திருவிழாவும், 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கம்சன் போர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணியளவில் தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை கேணித் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66,27)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** யோகமான நாள். வியாபாரிகளின் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். வெளியூர் பயணம் ஆதாயம் தரும். கவனமாக செயற்படவேண்டிய நாள். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது பிரச்சினைகளை சந்தித்தாலும் சாதுர்யமாக சமாளிப்பீர்கள்.

**இடபம்:** நினைப்பதை சாதிக்கும் நாள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் இலாபம் காண்பீர். எதிர்ப்பை சந்திக்கும் நாள். வேலைபளு அதிகரிக்கும். குடும்பத்தில் சிறு நெருக்கடி ஏற்பட்டு விலகும். ஆதாயமான நாள். தடை விலகும்.

**மிதுனம்:** முன்னேற்றமான நாள். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பேச்சில் கவனம் தேவை. கவனமாக செயற்பட வேண்டிய நாள். மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்த்த வருவாய் வரும்.

**கடகம்:** அதிர்ஷ்டமான நாள். மனதில் இருந்த குழப்பம் விலகும். திட்டமிட்டு செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். நீங்கள் நினைத்தபடியே செயல்கள் நடந்தேறும். நிதானமாக செயற்படவும்.

**சிம்மம்:** விருப்பம் நிறைவேறும் நாள். பழைய பிரச்சினைகள் முடிவுக்கு வரும். உங்கள் செல்வாக்கு உயரும். பிறரை அனுசரித்துச் சென்று ஆதாயம் காண வேண்டிய நாள். வீண் அலைச்சல் ஏற்படும். நன்மையான நாள்.

**கன்னி:** கோயில் வழிபாட்டால் ஆதாயம் காணும் நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த வருவாய் வரும். போட்டிகளை சந்திக்கும் நாள். திட்டமிட்டு செயற்படுவதால் வருமானம் அதிகரிக்கும்.

**துலாம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகளை சரிசெய்வீர். உழைப்பு அதிகரிக்கும் நாள். உங்கள் முயற்சியால் தேவைகள் நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி வரும். ஆதாயமான நாள். எதிர்ப்பு விலகும்.

**விருச்சிகம்:** நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி ஆதாயமாகும். உறவுகளால் உங்கள் செயல் சாதகமாகும். யோகமான நாள். குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். நீண்டநாள் பிரச்சினை முடிவுக்கு வரும்.

**தனுசு:** நினைப்பது நிறைவேறும் நாள். புதிய முயற்சிகளில் அதிக அக்கறை செலுத்துவது நன்மையாகும். கவனமாக செயற்பட வேண்டிய நாள். உங்கள் எதிர்பார்ப்பில் இன்று இழுபறி ஏற்படும். : தடைகள் விலகும் நாள்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். நீங்கள் மேற்கொண்ட வேலை இழுபறியாகும். புதிய பொருள்கள் சேரும் நாள். உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்.

**கும்பம்:** வருவாயால் வளம் காணும் நாள். வியாபாரத்தில் போட்டியாளர்கள் விலகிச் செல்வர். அமைதி காக்க வேண்டிய நாள். திட்டமிட்டு செயற்படுவீர் என்றாலும் எதிர்பாராத நெருக்கடிக்கு ஆளாவீர். நன்மையான நாள்.

**மீனம்:** வருவாய் அதிகரிக்கும் நாள். நீண்ட நாள் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். யோகமான நாள். சுயதொழில் புரிவோருக்கு வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் ஏற்படும். விழிப்புடன் செயற்படவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அக்கரைப் பச்சைக்கு ஆப்பு!

கனடாக் கனவில் மிதந்துகொண்டிருந்த ஈழத்தமிழ் இளையோருக்கு இடியாக வந்திறங்கியுள்ளது கனேடியப் பிரதமரின் புதிய அறிவிப்பு. கடந்த இரு வருடங்களாக கனடாவுக்கான விசாவில் கடைப்பிடிக்கப்பட்ட தளர்வுப் போக்கை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் நிறுத்துவதோடு, இனிமேல் முன்னரைவிடவும் மிக இறுக்கமான விசா நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்பே இப்படி ஈழத்தமிழ் இளையோரின் காதுகளில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றியுள்ளது. தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவெடுத்துள்ளதன் பின்னணியே கனேடிய அரசின் இந்த முடிவுக்கு காரணமாகும். கனடாவில் குறைந்த வருமானம் கொண்ட வேலைகளுக்காக தற்காலிகமாக குடிபெயரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதனால், கனேடியர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதோடு, அரசுக்கு எதிரான போக்கும் அதிகரித்துள்ளது. இதனாலேயே வெளிநாட்டு ஊழியர்களுக்கான விசா நடை முறையை மிக இறுக்கமாக்கும் முடிவை எடுத்துள்ளது கனடா அரசு. இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த முடிவை அரசு எடுத்துள்ளது என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

தொழிலாளர் பற்றாக்குறையை நிரப்பவும், குறைந்த ஊதியத்தில் வெளிநாட்டவர்கள் வேலைக்கு வருவார்கள் என்பதாலும் கடந்த 2022 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர் திட்டத்தின் கீழ் அதிகமானோர் கனடாவில் தற்காலிகமாகக்குடியேறினார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஈழத் தமிழர்கள். கனடாவின் விசாக் கதவுகள் அகலத் திறந்த வேளையில்தான், இலங்கையும் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீண்டுகொண்டிருந்தது. எனவே இலங்கையில் இருந்தால் வாழவேமுடியாது என்ற எண்ணத்தில் கோடிக்கணக்கில் கொட்டினாலும் பரவாயில்லை, கனடாவில் கால்வைத்தால்போதும் என்று ஈழத்தமிழ் இளையோர் மட்டுமல்லாது எல்லோருமே சிந்தித்தார்கள். அதன் விளைவாக குடும்பம், குட்டியோடு எல்லோரும் கனடாவுக்கு மூட்டை முடிச்சுகளுடன் பறக்கத் தொடங்கினர். இலங்கையில் மருத்துவர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் இருந்தவர்கள்கூட, அந்தப் பதவிகளை உதறிவிட்டு கனடாவுக்கு ஓடினார்கள். அந்தளவுக்கு கனடாக் கனவு எல்லோரையும் பேய்போல பிடித்து ஆட்டத்தொடங்கியது. இதனால்இப்போது கனேடியர்களுக்கே அங்கு வேலை இல்லாத நிலைமை. நின்ற வெள்ளத்தை வந்தவெள்ளம் கொண்டுபோனால் யார்தான் சும்மா இருப்பார்கள்? அவர்கள் அரசின் இந்தக் கொள்கைக்கு எதிராகக் கடுமையாக அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கினார்கள்.

கடந்த ஆண்டுகளில் மக்கள் தொகை அதிகரித்து, வீட்டு வசதி மற்றும் எனைய சேவைகளுக்கு கனடாவில் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும் என்ற நோக்கத்தில் அந்தத் திட்டத்தில் திருத்தம் செய்து குடிபெயர்வோரை தடுக்கும் முடிவை அந்தநாட்டு அரசு எடுத்துள்ளது. இதைவிட, நிரந்தரக் குடியுரிமை பெற்ற வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் கனேடிய அரசு திட்டமிடத் தொடங்கியுள்ளது. நிரந்தர வதிவிட நியமனங்களின் எண்ணிக்கையை 25 சதவீதம் குறைத்தல் மற்றும் கற்கை அனுமதிகளை கட்டுப்படுத்துவதை புதிய கொள்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

இதனால் இனிமேல் கனடாவுக்கு இங்கிருந்து செல்வோர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தகுந்த காரணமின்றி அல்லது வேலைக்கான அனுமதிப்பத்திரம் இன்றி எக்காரணம் கொண்டும் கனடா விசா வழங்கப்படமட்டாது. அத்தோடு இங்கிருந்து விருந்தினர் விசாவிலோ, சுற்றுலா விசாவிலோ கனடாவுக்குள் நுழைந்துவிட்டு, காலம் முழுக்க கனடாவில் இருக்கும் முயற்சிக்கும் ஆப்பு வந்துவிட்டது. விருந்தினர் விசா, சுற்றுலா விசாவில் கனடாவுக்குள் வந்து சொந்த நாட்டுக்குத்திரும்பாமல், சட்டவிரோதமாகத் தங்கியிருப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்களின் நிரந்தரக் குடியுரிமையைப் பறிப்பது தொடர்பிலும் கனடா அரசாங்கம் ஆலோசித்து வருகின்றாதாம். இனியும் அக்கரைப் பச்சைக் கனவுகளில் மூழ்காமல் சொந்தநாட்டில் சொந்தக்காலில் நின்று முன்னேறும் வழிகளை எமது இளையோர் கண்டடைவதே காலப்பொருத்தம்.




# நாளை ஆரம்பமாகிறது வாக்குச்சீட்டு விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 2

உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டு விநியோக நடவடிக்கைகள் நாளை 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு சுமார் 8 ஆயிரம் பேரை பணியில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

இன்று தபால் ஊழியர்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்குச் சென்று வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதிகளை உரிய முகவரிகளுக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 3 ஆம் திகதியிலிருந்து உரிய தபால் அலுவலகங்கள் ஊடாக வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் சிரேஷ்ட பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க மேலும் தெரிவித்தார். (ச-இ)

# விஞ்ஞாபனங்கள் தபாலில் மக்களுக்கு



கொழும்பு, செப்.2

ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை தபால் மூலம் மக்களுக்கு விநியோகிக்கமுடியும் எனவும் அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி, வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்கள், பரப்புரை அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை தபாலினூடாக மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கலாம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கூறியுள்ளார். (ச)

# எரிவாயு விலை மாற்றமில்லை

கொழும்பு, செப். 2

மாதாந்த சமையல் எரிவாயு விலை திருத்தத்தின்படி, செப்ரெம்பர் மாதத்தில் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனை லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். (ச)

# பணவீக்கம் ஓகஸ்ட் சரிவு

கொழும்பு, செப்.2

கடந்த ஜூலை மாதம் 2.4 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஓகஸ்ட் மாதம் 0.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த ஜூலை மாதம் 1.5 பதிவான உணவுப் பணவீக்கம் ஓகஸ்ட் மாதம் 0.8 சதவீதமாகவும், ஜூலையில் 2.8 பதிவான உணவல்லாப் பணவீக்கம் ஓகஸ்ட் மாதம் 0.4 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. (ச)

# ஓய்வற்ற வேலை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, செப்.2

கடந்த மூன்று வருடங்களில் வாரத்துக்கு 40 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 7 இலட்சமாக அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வாரத்துக்கு 40 மணிநேரம், அதற்கு மேல் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 56.2 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டு அது 17 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பொருளாதாரப் பணவீக்கம் போன்றவற்றால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## நாளை

03.09.2024

செவ்வாய்க்கிழமை - ஆவணி - 18

சுபநேரம் : 10.35 - 12.05

ராகுகாலம் : 03.05 - 04.35

## நாளொரு நல்வார்த்தை

சந்தனம் துண்டு துண்டாக ஆனாலும் அதன் மணம் மாறாது. அது போன்றுதான் நல்ல மனிதர்களின் குணம், வறுமை வந்தாலும் மாறாது.

- சாணக்கியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.04.1943 — மறைவு 25.08.2014

## அமரர் அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை

திதி : அமாவாசை (02.09.2024)

நாட்களும், வாரங்களும், மாதங்களும் தான் அவை
கடந்திட வருடங்களோ பத்தாகிவிட்டதே !
ஆனாலும் உம்பிரிவின் துயரம் உம் நினைவுகளும்
என்றும் எம் மனம் விட்டு நீங்கிவிடாது அம்மா !
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

(CS/56021) J-1

"மலரகம்"
கொட்டக்காடு வீதி
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்

# ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், செப். 2

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாக் காலத்தில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆதீன வளாகத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக அருளுரை வரிசையில் தீர்த்தத் திருவிழா நாளான இன்று திங்கட் கிழமை

இரவு 8 மணியளவில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் 'அஞ்சுவமோ நாங்களடி! ஆறுமுகன் தஞ்சமடி!!' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார்.

(ச-66)

# என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

34 ஆவது வருட — 10 ஆவது வருட



உதயம் 18.06.1933
அஸ்தமனம் 20.08.1990

தோலகட்டி, வயாவிளான்

## அமரர் வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேசசபை, - அச்சுவேலி)

திதி: 02.09.2024



உதயம் 02.07.1935
அஸ்தமனம் 27.08.2014

தோலகட்டி, வயாவிளான்

## திருமதி சிவபாக்கியம் நடராசா

திதி : 04.09.2024

அன்புடனும், பாசத்துடனும், எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி, எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே ! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களின் இதயங்களில் உங்களின் நீங்காத நினைவலைகளை சுமந்தபடி ஆண்டு தோறும் நல்லூரானின் தீர்த்தக்கரையில் நின்று கொண்டு கண்ணீர் பூக்களினால் உங்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கும் நாங்கள்!

இல. 27/5, மெமோறியல் மூன்றாம் ஒழுங்கை,
மானிப்பாய்.
077 995 6974, 021 255 5252

என்றும் உங்களின் நினைவுகளில்
அன்பு மகன்மார், மகள்மார்,
மருமக்கள் மார், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## இராமநாதர் சிவேந்திரகலாநிதி

(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)



தோற்றம் 25.12.1962 — மறைவு 01.09.2024

அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் வடக்கை முன்னைய வதிவிடமாகவும், யாழ்ப்பாணம் நீராவியடியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட இராமநாதர் சிவேந்திரகலாநிதி அவர்கள் நேற்று (01.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சிவபாக்கியம் (இளைப்பாறிய அதிபர், ஆசிரியர்) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் செட்டியார் - புண்ணியதர்மபத்தினி தம்பதியினரின் அன்பு மருமகனும், லெட்சுமிபிரபா (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், சிவநிரோஜினி (ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), மஞ்சுளானி (Software Engineer, Direct FN) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகனின் (உதவி விற்பனை முகாமையாளர், யூனியன் அஸ்யூரன்ஸ்) பாசமிகு மாமனாரும், மிருதுஷா, பிரகதேஷ், தர்வினேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும், குமுதினி (ஓய்வு நிலை அதிபர்), மகேந்திரன் (ஓய்வு நிலை அதிபர்), அமிர்தகௌரி (ஓய்வு நிலை ஆசிரியர்), வசந்தசெல்வி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்), சர்வேந்திரன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தென்மராட்சி பிரதேச செயலகம்), சத்தியேந்திரம்பிள்ளை (உப பீடாதிபதி , யாழ் தேசிய கல்வியற் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாமநாதன், பரலோகராஜா, காலஞ்சென்ற மனோராஜி, ஆதிரை, சுபாதினி, சந்திரப்பிரபா, பிரபாகரன், திவாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43/1, மணிக்கூட்டு ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 666 1627

(CS/56086) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எம்.பி.க்களிடையே ஒற்றுமை மிக அவசியம்



## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.2**

**தமிழ்பேசும்நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து செயற்பட்டால் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி பிறக்கும் - இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**

வடக்கு-கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இணைந்து செயற்படவேண்டும்-இவ்வாறு இணைந்து செயற்பட்டால் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிபிறக்கும் .

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் பிரிவடைந்துள்ளன. மலையகத்திலும் இந்நிலைமை காணப்படுகின்றது. இது ஏற்புடைய விடயமல்ல. எனவே. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் இணைந்து பயணிக்கவேண்டும்.

அதன்மூலம் அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும்- என்றார். (ச-44)

# தபால்மூல வாக்குச்சீட்டுகள்; நிறைவுறும் விநியோகப்பணி

கொழும்பு, செப்.2

இம்மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளில் 95 வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இராணுவத் தளங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் இன்று அனுப்பிவைக்கப்படும்.

712,318 அரச துறை ஊழியர்கள் 2024 இல் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக் காலம் செப்ரெம்பர் 4 ஆம் 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கிளி. மருத்துவமனையில் குருதிக்குத் தட்டுப்பாடு!

## குருதிக்கொடையாளர்கள் முன்வருமாறு அழைப்பு



கிளிநொச்சி, செப்.2

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 'ஓ' வகை குருதி தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனையின் இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

மாவட்ட மருத்துவமனையில் இரத்த வங்கியில் O+ மற்றும் O இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றன. எனவே குருதி கொடை வழங்கும் அன்பர்கள் மாவட்டமருத்துவமனையின் இரத்த வங்கியுடன் தொடர்புகொண்டு தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இரத்த தானம் செய்ய முடியும். அவசர அவசிய நிலைமையை கருத்திற்கொண்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது என்றும் மருத்துவமனை இரத்த வங்கி தெரிவித்துள்ளது. (ச-113)



# வீடொன்றிலிருந்து கடலாமை மீட்பு!

யாழ்ப்பாணம்,செப்.2

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரம் வெண்புரவி நகர்ப் பகுதியில் வீடு ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடல் ஆமை ஒன்று மீட்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஆமை கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி-23)

# 6 மாதங்களுக்கு ஒருமுறை 'அஸ்வெசும' புதுப்பிப்பு

கொழும்பு, செப்.2

நிவாரணம் கிடைக்கப்பெறாதவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக அஸ்வெசும நிவாரணம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பண்டாரவளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மேலும் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு 15,000 வாக்குப்பெட்டிகள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது நாடெங்கும் 15 ஆயிரம் வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவிடம் தற்போது சுமார் 25 ஆயிரம் வாக்குப் பெட்டிகள் இருக்கின்றன.

அதேவேளை, தேர்தலுக்கான வாக்குச்சீட்டு 26 அங்குல நீளம் கொண்டதாகவும் இது கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அச்சடிக்கப்பட்ட வாக்குச் சீட்டின் நீளத்துக்கு இணையாகவும் உள்ளது. நாடளாவிய ரீதியில் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ட)



# தினம் தெரியுமோ?

**இந்த வருச நல்லூர்த்திருவிழா முடிவுக்கட்டத்துக்கு வந்திட்டுது. ஒவ்வொரு வருசமும் நல்லூர்த் திருவிழாவில ஏதாவது ஒரு புதுமையைச் செய்யிறது கோயில் நிர்வாகத்தின்ர வாடிக்கை. ஆனால் இந்தமுறை செய்த ஒரு புதுமையான பிளான் எல்லாரையும் ஒருக்கா இன்ப அதிர்ச்சிக்குள்ள தள்ளிப்போட்டுது. மற்றக்கோயில்கள் மாதிரி சமூகத்துக்கு நல்லூர் ஒண்டும் செய்யிறேலை, அதால நல்லூர்க்கோயிலுக்கு எங்கட சனங்களில அக்கறை இல்லை எண்டமாதிரி ஒரு கதை சிலரிட்ட இருந்தது. அதுக்குப் பதிலடி மாதிரி ஒருவேலையை இந்தமுறை மாம்பழத் திருவிழாவில நல்லூர்க்காரர் செய்துபோட்டினம்.**

**இந்தமுறை மாம்பழத்திருவிழாவில திடீரெண்டு ஒரு இடத்தில கும்பலா சின்னப்பெடிபெட்டையள் குவிஞ்சு போய் நிண்டிச்சினம்.**

**எனக்கொண்டு ...எனக்கொண்டு எண்டு எல்லாச் சின்னாக்களும் கையை நீட்டிக்கொண்டு நிக்க, நடுவுக்க நல்லூர்க்கோயில் முதலாளி அவரின்ர கையில மாங்கண்டுகள்.**

**பிள்ளையள், இந்தமுறையில இருந்து நல்லூரான்ர பேரால 'கடனா மாங்கன்றுகள் வழங்கும் திட்டம்' எண்ட ஒண்டை தொடங்கியிருக்கிறம். நாங்கள் நல்லூரான்ர பேரால ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு மாங்கண்டு தருவம். மாம்பழத்திருவிழா நினைவா இந்தக் கண்டைக் கொண்டுபோய் உங்கட வீடு களில நட்டு, தண்ணி ஊத்தி வளவுங்கோ.**

**தாங்கோ, நாங்கள் எல்லாரும் வடிவா வளர்ப்பம். அதுவும் முருகன் தந்த கண்டு நாங்கள் அதைக் கடவுளா நினைச்சு வளர்ப்பம் எண்டு அந்தச் சின்னப்பிள்ளையள் சொல்ல, கோயில் முதலாளிக்கு இன்னும் சந்தோசம்.**

**ஆனால் இந்தக் கண்டை முருகன் உங்களுக்குச் சும்மா தரேலை, அவருக்கு மாம்பழம் வேணுமாம். அதால இந்தமுறை ஆரெல்லாம் மாங்கண்டுகள் வாங்கிக்கொண்டு போறீங்களோ, அவையெல்லாம் இனிமேல் ஒவ்வொரு வருசமும் மாம்பழத் திருவிழாவுக்கு முதல்நாளே கோயிலுக்கு ஒவ்வொரு மாம்பழம் முருகனுக்கு கொண்டந்து குடுக்கோணுமாம். நீங்கள் குடுப்பியளோ? எண்டு அவர் கேக்க, பிள்ளையள் எல்லாரும் சந்தோசமா, ஒரே குரலில ஓமோம்! எல்லாரும் கொண்டந்து குடுப்பம் எண்டு சொல்லிச்சினம். அண்டைக்கு திருவிழாவுக்கு எல்லாச்சின்னப்பிள்ளையளும் கையில் ஒவ்வொரு மாங்கண்டோட தான் வீட்டை போனவை. இப்பிடி ஒவ்வொரு வருசமும் மாம்பழத்திருவிழாவில மாங்கண்டுகள் குடுக்கப்போயினமாம். கோயில்காரர் இப்பிடிக் குடுத்ததைப் பார்த்திட்டு அடுத்த வருசத்தில இருந்து வேற ஆக்களும் தண்ணீர்ப் பந்தல் மாதிரி, மரப்பந்தல்போட்டு மாங்கண்டு குடுக்கப்போயினம் எண்டும் கதை. இந்தத் திட்டத்தால நல்லூரானுக்கு மாம்பழமுமாச்சு, வீட்டுக்கு ஒரு மரமுமாச்சு.**

**என்னவோ கந்தன்ர கருணையால வீட்டுக்கொரு மாமரம் வளர்ந்து, யாழ்ப்பாணத்தை பசுமையாக்கினால் நல்லதுதானே. கந்தன்ர நிழலில யாழ்ப்பாணத்து வெக்கை கொஞ்சம் தணியுமெல்லோ.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பெருமையை எடுத்தியம்பியது வல்வெட்டித்துறை மண்ணே!

செந்தமிழ்ச் சொல்லருவி லலீசன் புகழாரம்!

யாழ்ப்பாணம், செப். 2

**பல சாதனைகளைப் படைத்த மண் வல்வெட்டித்துறை மண். முதன்முதலாக அமெரிக்காவுக்கு கப்பல் விட்ட மண் வல்வெட்டித்துறை மண். உலகப் பரப்பெங்கணும் தமிழ் மண்ணின் பெருமையை எடுத்தியம்பிய தலைவர் பிறந்த மண் வல்வெட்டித்துறை மண். அதுமட்டுமன்றி சைவத்துக்குத் தலைமை தாங்கக்கூடிய ஒரு தகைமையாளரான மோகனதாஸ் சுவாமிகளைச் சைவத்தமிழ் உலகத்துக்குத் தந்திருக்கிற மண் வல்வெட்டித்துறை மண் எனக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் புகழாரம் சூட்டியுள்ளார்.**

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் பவள விழாவும் அறம் பாலிக்கும் ஞான மோகனம் நூல் வெளியீடும் நேற்றுச் சனிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்ற போது கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1950 ஆம் ஆண்டில் மடங்கள் என்றால் அது சந்நிதி ஆலயச் சூழலிலேயே இருந்ததாக வரலாறு கூறுகிறது. மடம் என்றால் சந்நிதியான் ஆச்சிரம தனித்துவமானது. எங்கள் அப்பு, ஆச்சி காலத்தில் ஆற்றுப்படுத்தும் நிலையமாக விளங்கியவை சந்நிதியான் மடங்கள் போன்ற மடங்கள் தான். வீட்டில் சொதிக்கு உப்புக் குறைந்தால் தான் அப்பு ஆச்சிக்கு இடையில் சண்டை வந்தால் சந்நிதியிலே அப்புவைக் காணலாம். குடும்பம் பிரிவதற்கான வழிகளே கிடையாது. இதுவரை சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்ட பணிகளை பட்டியலிட்டுக் கூற ஒருநாள் மாத்திரம் போதாது.

இந்த மண்ணில் சைவச் சான்றோர்கள் தன்னலமற்ற பல பணிகளை மேற்கொள்வதால்தான் இந்த மண்ணே வாழ்கிறது. பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து உண்ணும் பெருந்தகைகள் இன்னும் இருப்பதால் இந்த உலகம் வாழ்கிறது - என்றார். (ஒ-66)



## நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி, செப்.2

ஆசிரியர், நாடகர், பண்பாட்டாளர், கூட்டுறவாளர், அரசியலாளர் க.விஜயசேகரன் பற்றிய பன்முகன் நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெற்றது. நூல் அறிமுகத்தினை கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை யோசுவா அடிகளார் நிகழ்த்தினார்.

நூலினை நூலாசிரியரின் மாணவரான மருத்துவ கலாநிதி முருகேசு சிறிதர் வெளியிட நூலாசிரியர் பெற்றுக்கொண்டார். (ச-45-13)

# கிரிக்கெட் தொடர் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப்.2

அரியாலை கில்லிகள் கிரிக்கெட் குழுமத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாபெரும் கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக அரியாலை கில்லிகள் கிரிக்கெட் குழுமத்தின் தலைவர் கே.நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரும் முகமாக இந்தப் போட்டியை நடத்தவுள்ளோம்.

அரியாலை, கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பண்டியன்தாழ்வு மற்றும் சுண்டுக்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வீரர்களை மையப்படுத்தி 10 அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இதில் முதலிடத்தைப் பெறும் அணிக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசும், வெற்றிக் கேடயமும், இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு 80 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும், மூன்றாம் இடத்தை பெறும் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும், வெற்றிக் கேடயமும் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-45-27)

# நீலங்களின் சமர்; கிளி. இந்துக்கல்லூரி கிண்ணம்




கிளிநொச்சி, செப்.2

கிளிநொச்சி இந்துக்கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிகள் மோதிய 13 ஆவது வடக்கின் நீலங்களின் சமரின் முதல் நாள் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. 27 ஓட்டங்கள் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரண்டாவது தொடரை ஆரம்பித்த மத்திய கல்லூரி அணி 66 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்திருந்தன. 94 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி அணி ஐந்து இலக்குகளை இழந்து வெற்றி வாகை சூடியது. (ச-25-113-13)



## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப்.2

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் தொடர்பான நடமாடும் சேவை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனலைதீவு பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நடமாடும் சேவையில் மாகாணக் காணி நிர்வாகத் திணைக்களம், வடக்கு மாகாணம், வலயக் கல்விப் பணிமனை, தீவக வலயம், பொலிஸ் நிலையம், ஊர்காவற்றுறை, கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களின் ஊழியர்கள், ஊர்காவற்றுறை பிரதே செயலர் திருமதி மஞ்சுளா சதீசன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி கபிலன், பிரதேச செயலக காணி பிரிவு அதிகாரி விவ்லவராஜன், மேலதிக மாவட்ட பதிவாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-25-27)



உள ஆரோக்கியம், படைப்பாக்கம், திறன் விருத்தி விளையாட்டுகள், பற் சுகாதாரம், நேரிய சிந்தனையை வளர்த்தல் முதலான விடயங்களை உள்ளடக்கிய மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நவாலி மகா வித்தியாலய மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டது. (ச-66)



தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பங்களித்த தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருடைய 44வருட நினைவு தினம் நகரசபையின் ஏற்பாட்டில் வவுனியா நகரமத்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் நகரசபையின் செயலாளர், சமூகஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைக்கு அலி சப்ரி தயாரா?

## சுரேன் கேள்வி

யாழ்ப்பாணம், செப். 2

காணாமல் ஆக்கப்பட்டோர் எத்தனை பேர் என்ற வாய்க் கணக்குகளைச் சொல்வதை விடுத்து சர்வதேச விசாரணை நடத்துவதன் மூலமாகவே சரியான கணக்கை அறிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான் யார் பொய் சொல்லுகிறார்கள் யார் உண்மை சொல்லுகிறார்கள் என்பது வெளிவரும். அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் முடியும். அதை விடுத்து காலத்துக்கு காலம் வெளிவிவகார அமைச்சர்களாக வருபவர்கள் தங்கள் மனக்கணக்குகளின் படி காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையைக் கூறுவது அபத்தமாகும். இவ்வாறு ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

சர்வதேச பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம், காணாமல் ஆக்கப்பட்டு இருக்கலாம் என்று சனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உண்மையைக் கண்டறிவது அரசினுடைய கடமை. அதற்கான நியாயபூர்வமான விசாரணையை நடத்துவதும் அரசின் கடமை. உள்ளூர் விசாரணைகளின் மூலம் நீ பொய் சொல்லுகிறாய், நான் பொய் சொல்லுகிறேன் என்று ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதனால் தான் சர்வதேச விசாரணை கோரப்படுகிறது. சர்வதேச விசாரணையின் மூலமே சரியான தரவுகளையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய எண்ணிக்கையும் அறிந்து கொள்ளமுடியும்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியினுடைய கருத்தும் சர்வதேச விசாரணையைக் கோருவதே சாலச் சிறந்தது என்று தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது. அவர் கூறும் எண்ணிக்களை தமிழ் மக்களோ சர்வதேச பொறிமுறைகளோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதையும் வெளிவிவகார அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஓ-27)

## தமிழரசுக்...

சமூக ஊடகத்தில் இதனைப் பதிவு செய்துள்ள அவர், நாங்கள் இணைந்து அனைவரும் வெற்றிபெறுவோம். இன வெறியில்லாத பாரபட்சம் இல்லாத எதிர்காலத்தை உருவாக்குவோம் எனத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)



## அரோகரா...

பெற்றதைத் தொடர்ந்து காலை 6.15 மணியளவில் வசந்தமண்டபப்பூசைகள் ஆரம்பமாகி இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் இச்சா சக்தி, கிரியா சக்திகளான வள்ளி தெய்வயானை சமேதாராக திருநடனத்துடன் ஆலய உள்வீதியில் எழுந்தருளினார். யாகசாலை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் தேவியர் இருவருடன் அழகிய சித்திரத்தேரில் அலங்கார நாயகனாக ஆரோகணம் செய்தார்.

சிறப்புத் தீபாராதனை, வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அடியவர்கள் வடம் தொட்டிழுக்க, அரோகராக் கோஷம் முழங்க காலை 7.30 மணியளவில் சித்திரத்தேர்ப் பவனி ஆரம்பமானது. சித்திரத் தேர் காலை 8.30 மணியளவில் மீண்டும் இருப்பிடத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமானுக்குப் பச்சை சாத்தப்பட்டு ஊஞ்சற்பாட்டு இடம்பெற்றது. தொடர்ந்து சித்திரத் தேரிலிருந்து ஆறுமுகப் பெருமான் அவரோகணித்தார். சிறப்புத் தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து மு.ப. 10.15 மணியளவில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை நாயகியருடன் மீண்டும் இருப்பிடம் நோக்கிச் சென்றடைந்தார். அதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிசேகமும் இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவை முன்னிட்டுப் பல நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், செதில் காவடிகள், பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள் உள்ளிட்ட வகை வகையான காவடிகள் எடுத்தும், பெண் அடியவர்கள் அடியழித்தும், பாற்காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

சாரணர்கள், சென்ஜோன்ஸ் முதலுதவிப் பிரிவினர், பொலிஸார் மற்றும் ஆலயத் தொண்டர்கள் அடியவர்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆலயச் சூழலிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் பல இடங்களில் அடியவர்களுக்கு அன்னதானம் பரிமாறப்பட்டது. அத்துடன் தாகசாந்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் சிறப்புச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இதேவேளை - 1964 ஆம் ஆண்டு நல்லூரானுக்கெனப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இவ் வருடம் அறுபதாவது அகவை கண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். (அ-ஒ-66)


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# 1ம் ஆண்டு நினைவுதின அழைப்பிதழ்



அன்புடையீர்!

கடந்த 16.09.2023 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் அம்பலவாணர் கனகசபை**
**(ஆசாரியார்)**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 03.09.2024 செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி,
செல்வநாயகம் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 072 7879

(CS 1255) V-1



# கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி
திரு. S.R. சத்தியேந்திரம்பிள்ளை
அவர்களின் பாசமிகு சகோதரர்
**இராமநாதர் சிவேந்திரகலாநிதி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 25.12.1962
இறப்பு 01.09.2024

கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



# சேவை நலன் பாராட்டு

1993 ஆம் ஆண்டிலிருந்து 2024 வரையான 31 வருடங்கள் யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தராக எம்மோடு பணியாற்றி வந்த எமது சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினராகிய

**பாலச்சந்திரன் சயந்தன்**




அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்

அகவை அறுபதில் (01.09.2024) தொடங்கிய ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைவதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(CS/56084) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1936



மறைவு 30 . 08 . 2024

**அமரர் பரமநாதர் குணசேகரம்**

யாழ் காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வாழ்விடமாகவும் கொண்ட பரமநாதர் குணசேகரம் அவர்கள் (30.08.2024) வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதர் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான C.M.கதிரவேலு செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சிவஞானம் அவர்களின் அன்புக் கணவரும் ராதா, ராகினி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ராஜா, ஸ்கந்தா, சிவாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவி, வசிகரன், அஞ்சலி, அபிரன், ஹரிஷ், கிரிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (03.09.2024) காலை 8.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைகளுக்காக St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas Street, Mississauga, ON L4Y 2B5, Canada) எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
சுதாகரன் (மகன்) +141 689 56704

(CS 1259) V-1

## மரண அறிவித்தல்



**திருமதி சாவித்திரிதேவி கணேசலிங்கம்**

அரசடி வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாவித்திரிதேவி கணேசலிங்கம் 01.09.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கணேசலிங்கம் (இளைப்பாறிய உப அதிபர் சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி (இளைப்பாறிய மாநகரசபை உதவி அதிகாரி) மற்றும் விஜயம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிறாப்பர் கந்தையா மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஈஸ்வரப்பிரியா, கிரீஷன் (ஆசிரியர் சென் ஜோண்ஸ் கல்லூரி) மற்றும் Dr.கீர்வாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கஜானனன், கோசலை மற்றும் ஜனகனின் அன்பு மாமியாரும் வாமநயனா, ஹரி, ஈர்த்தன் கிருத்விகன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.09.2024 (திங்கட்கிழமை) இன்று அவரது இல்லத்தில் மதியம் 1.30 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக 2.30 மணியளவில் கோம்பயன் மனல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
கிரிஷன்-077 226 7053

# தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை நிதி அமைச்சால் நிராகரிப்பு

கொழும்பு, செப். 2

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு தேர்தல் கடமைகளில் ஈடுபட்டமையால் அவர்களின் மாதாந்த சம்பளத்தில் ஏற்படும் அதிகரிப்பால் அறவிடப்படும் வரியை இரத்துச்செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் விடுத்த கோரிக்கையை நிதியமைச்சு நிராகரித்துள்ளது.

இவ்வாறு வரிவிலக்கு அளிப்பது சட்டவிரோதமானது என திறைசேரி தெரிவித்துள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் பலவற்றை தேர்தல்கள் திணைக்களம் நிறுத்தியுள்ளதாகவும் திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஒ-6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 28.10.1946 மறைவு 01.09.2024

**திருமதி சுப்பிரமணியம் தவமணிதேவி**

1211 கே. கே. எஸ் வீதியை சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் தவமணிதேவி (01.09.2024) நேற்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.09.2024 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1257) V-1

## விண்ணக வாழ்வின் 3ம் ஆண்டினில்

துகளாய் 02 . 03 . 1995



தூபமாய் 02 . 09 . 2021

**அமரர் ஞானப்பிரகாசம் பிரகாஸ்**

(சுயாதீன ஊடகவியலாளர்)



எங்கள் அன்பு செல்வமே பிரகாஸ்!!!
நீ எம்மை விட்டு சென்று ஆண்டுகள் மூன்று
பறந்ததுவே!!
எம் வீட்டில் உன் இடம் எப்போதும் வெற்றிடமே.... நீ
தினமும் இருந்த இடத்தில் தேடுகின்றோம் உன்
தரிசனம் கிடைக்காதா என...
ஏற்க மறுக்கிறது மனம்...
இருப்பினும் நாமும் ஓர் நாள் உன்னிடம் வருவோம்
என்று தேற்றுகிறோம் மனதை...
உன் ஆன்மா
விண்ணக வாழ்வில் இன்புற்றிருக்க தினமும்
மன்றாடுகின்றோம்...
"உலகில் நீயும் வாழ்ந்த காலம் உயர்ந்த வாழ்வின்
பயணமே..."

என்றும் உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, அண்ணா, சின்னண்ணா,
அக்கா, அத்தான்

(CS 1258) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலியில்...

ஆரம்பித்துள்ளது. சென்னையிலிருந்து பயணத்தை ஆரம்பித்த விமானமானது 52 பயணிகளுடன் நேற்று பிற்பகல் 3.07 மணியளவில் பலாலியை வந்தடைந்தது. இதன்போது இன்னியம் இசைக்க விருந்தினர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த பயணிகள் அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றல், வரவேற்பு நடனம், நினைவுப் பரிசில்கள் வழங்கல், கேக் வெட்டுதல் மற்றும் விருந்தினர்களின் உரை என்பன இடம் பெற்றன.

பின்னர் பலாலியில் இருந்து சென்னை நோக்கி இண்டிகோ விமானம் பயணத்தை ஆரம்பித்தது. பலாலியில் இருந்து புறப்பட்ட விமானத்தில் 74 பேர் பயணத்தை மேற்கொண்டனர். விமானத்தில் பயணித்த அனைத்துப் பயணிகளுக்கும் பனம் பானம் உள்ளிட்ட யாழ்ப்பாண உற்பத்திகள் வழங்கப்பட்டன. (அ-ஒ-27)

## சிலிண்டரும்...

சிறந்த இலங்கையில் வாழ வேண்டுமா? பங்களாதேஷ் போன்று இருக்க வேண்டுமா? 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களிப்போம். இன்றேல் சிலிண்டரும் வெடிக்கும், நாடும் வெடிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வவுனியா யங்ஸ்டார் விளையாட்டரங்கில் நேற்றுக் காலை நடைபெற்ற 'இயலும் சிறிலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் 'ரணில் 2024 இயலும் சிறிலங்கா' ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"பங்களாதேஷாக மாற இருந்த நாட்டை நான் மீட்டுள்ளேன். பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டும் தேர்தல் நடத்த முடியாதுள்ளது. 29 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். பிரதம நீதியரசர் துரத்தப்பட்டுள்ளார். அங்கு தேர்தல் நடத்த முடியாதுள்ளது. இங்கு செப்ரெம்பர் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெற இருக்கிறது.

இப்பொழுதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே எனக்குத் தேர்தலில் போட்டியிட முழு உரிமையுள்ளது தானே? தப்பியோடியவர்களை என்ன செய்யலாம்? அவர்களை மறந்துவிடாதீர்கள். அவர்களுக்கு இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொடுங்கள்.

எந்தநாளும் கடன்பெற்றுக் கொண்டிருக்கமுடியாது. எனவே ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்தி வெளிநாட்டு செலாவணி மிகையை ஏற்படுத்தவேண்டும். வீடு உடைந்து விழுந்தால் என்ன செய்வீர்கள். அதனை வலுவான அடித்தளத்துடன் கட்டியெழுப்ப வேண்டும். அடித்தளத்தில் உள்ள குறைபாடுகளை சீர்செய்யவேண்டும். அதனால் தான் இப்பணிகளை நிறைவு செய்வதற்காக நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

5 வருடங்கள் தான் ஆட்சிப் பொறுப்பைக் கேட்கிறேன். 4 வருடத்தில் அந்தப் பணிகளை நிறைவு செய்வேன். வாழ்க்கைச் செலவைக் குறைப்பது மற்றும் வாழ்க்கைச் செலவு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பது, வரி நிவாரணம் வழங்குவது, அதிகளவில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பது, பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றுவது, 'உறுமய', 'அஸ்வெசும' என்பவற்றைத் தொடர்வது என்பனவே எனது இலக்குகளாகும்.

2019 இல் வரியைக் குறைத்ததால் உரம் இல்லாத நிலை ஏற்பட்டது. அந்த நிலைக்கு மீண்டும் செல்லவேண்டுமா? கடந்த 4 வருடங்களாக தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. அடுத்த வருடம் ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவோம். ஏனைய கட்சிகள் தொழில் வழங்குவது தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை. 22 ஆம் திகதி முதல் எமது திட்டங்களைச் செயற்படுத்த இருக்கிறோம்.

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசத்தை முன்னேற்ற வேண்டும். விவசாய நவீனமயமாக்கலை மேற்கொள்ளவேண்டும். மல்வத்துஓய ஊடாக யோதவாவிக்கு நீர் அனுப்புவோம். சுற்றுலாத்துறை முன்னேறினால் இப்பகுதியிலும் சுற்றுலாத்துறை முன்னேறும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாங்குளம் போன்ற பகுதிகளில் முதலீட்டு வலயங்களை உருவாக்க இருக்கிறோம். காங்கேசன்துறையில் இருந்து ஆரம்பிக்க இருக்கிறோம். இங்கு சூரிய சக்தி உற்பத்தியை முன்னேற்றலாம். சூரிய மின் உற்பத்தியை மேற்கொண்டு இந்தியாவுக்கு விற்பனை செய்யலாம். உங்களின் வருமான வழிகளை அதிகரிக்கவேண்டும்.

இப்பிரதேசத்தில் காணி வழங்குவது தொடர்பில் வனவளதிணைக்களம் சார்ந்த பிரச்சினை இருப்பதால் 1985 ஆம் ஆண்டு வரைபடத்தின் பிரகாரம் செயற்பட இருக்கிறோம். அவர்களை அழைத்து உங்கள் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தருவோம். வீட்டு உரிமை வழங்க இருக்கிறோம். நடுத்தர வர்க்கத்தினருக்கு வீடுகளை நிர்மாணிக்க சலுகைக் கடன் வழங்குவோம். சஜித் ஆரம்பித்த வீடகளுக்கும் நிவாரணம் வழங்குவோம். இவ்வாறு பணியாற்ற அநுரவினாலோ சஜித்தினாலோ முடியுமா? இந்த முன்னேற்றத் திட்டத்தை தொடரப் போகிறீர்களா, குழப்பப் போகிறீர்களா?" - என்று கேள்வி எழுப்பினார். (அ-ஒ-இ)

## முடிவெடுக்க...

பதில் பொதுச் செயலர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மத்திய குழுக் கூட்டத்துக்கான கடிதம் கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அனைவருக்கும் அனுப்பப்பட்டதோடு தொலைபேசி மூலமாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அம்பாறையைச் சேர்ந்த மத்திய குழு உறுப்பினர்கள் இருக்கும் அனைத்து பிரதேசங்களிலும் அவர்களுக்கு கடிதங்கள் கிடைத்திருந்தன. மட்டக்களப்பில் இருந்து ஸ்ரீநேசன் தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்துகொள்ள முடியாது என தொலைபேசி ஊடாகத் தெரிவித்திருந்தார். யோகேஸ்வரனுக்குத் தபால் கிடைக்காததான் காரணம் தெரியவில்லை.

இதேவேளை - வெளிநாடு சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது நிலைப்பாட்டை, கட்சி செயலர் என்ற வகையில் எனக்குத் தெரிவித்து இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும் நிகழ்வு ஒன்றில் பங்கேற்க வேண்டிய தேவை இருப்பதன் காரணமாக தனது நிலைப்பாடு தொடர்பில் மத்தியகுழுவுக்கு தெரியப்படுத்துமாறு என்னிடம் தகவல்களைத் தெரிவித்து இருந்தார்.

இவ்வாறான சூழலில் எமது கட்சியின் தலைவர் கூட்டத்தில் பங்கேற்பதாக தெரிவித்திருந்தபோதிலும் சுகவீனம் காரணமாக கலந்துகொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

அதனால், எமது கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது.

தலைவர் இல்லாத இடத்தில் கட்சியின் மூத்த உப தலைவரைக் கொண்டு கூட்டத்தை நடத்துவதற்கான அனுமதி இருப்பதன் காரணமாக குறித்த கூட்டம் நடத்தப்பட்டு இருந்தது.

இன்று (நேற்று) கலந்துகொண்டவர்களில் மூவர் வரையில் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு தளத்தில் தமது கருத்தை வெளிப்படுத்தி இருந்தபோதிலும் ஏனையோர் கட்சி அறிவித்த நிலைப்பாட்டில் காணப்பட்டிருந்தனர்.

41 பேரில் 30 பேர் பங்கேற்று அதில் சுமார் 27 பேர் வரையில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற நிலைப்பாட்டில் இருந்ததன் காரணமாக எமது கட்சி இதனை மத்திய குழுத் தீர்மானமாக அறிவித்து இருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவோடு நான் தொலைபேசியில் உரையாடியுள்ளேன். எமது மூத்த துணைத் தலை வர் சி.வி.கே.சிவஞானம், நேரில் சென்று தெரியப்படுத்துவார்" - என்றார். (அ-ஒ-18-110)

## நாட்டைப்...

ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுக் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு - கிழக்கு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே எனது பயணம் அமையும். தேசிய உற்பத்திக்கு 42 சதவீத பங்களிப்பை மேல்மாகாணம் வழங்குகின்றது. வடமாகாணத்தால் 5 சதவீத பங்களிப்பே கிடைக்கின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை வடக்கு - கிழக்கில் நடத்த நல்லாட்சி காலத்தில் கேட்டதும் அப்பொழுது அரசாங்கம் அதனை மறுத்துவிட்டது. ஆனால் நான் ஆட்சிக்கு வந்தால் அதை நடத்துவேன்.

ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஜனாதிபதி உப செயலகத்தை அமைத்து வாக்காளருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தொடர்பைப் பேணுவோம்.

இதேவேளை - நாமலை ஒரு போட்டியாளராக நான் கருதவில்லை. இனவாதம் இந்தத் தேர்தலில் குறைந்துள்ளது என்று ஏற்றுக் கொண்டாலும் அதனை முற்றாக இல்லாமற்செய்ய முன்வரவேண்டும்.

இந்த நாடு சமனிலை அடைய நீதித்துறை ஊடாக ஏனைய மதம், இனத்தினை மதிக்க இடம் கொடுக்க வேண்டும். சமூக ஒற்றுமையூடாக சமய பாடசாலைகள் ஊடாக சமூக புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் அண்மையில் எமது வடமாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திர பிரகாஷ் தெரிவித்த கருத்தில் முழுவதையும் காட்டாது அதனை வெட்டி சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. இது சதி. முதலாவது வாக்கை தமிழ் மக்கள் பொதுவேட்பாளருக்கு வழங்கினால் இரண்டாவது வாக்கை சஜித்துக்கு வழங்குமாறே அவர் கேட்டிருந்தார்" - என்றார். (அ-ஒ-125)

## சஜித்துக்கே...

கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுப் பல மணி நேரமாக வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மத்திய குழுக் கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை. அத்துடன், எமது கட்சி உறுப்பினராகிய அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு கொடுக்கவுள்ளோம்.

இதுவரை எமது கட்சி, தீர்மானம் எதனையும் அறிவிக்காமையால் கட்சி உறுப்பினர்கள் பலவாறாகச் செயற்பட்டனர். தற்போது தீர்மானம் எடுக்கப்பட்டு சஜித்துக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்சி உறுப்பினர்கள் அதற்கேற்ப செயற்படுவார்கள்" - என்றார். (அ-ஒ-18-110)

## மத்திய...

மத்திய குழு உறுப்பினர்களாக உள்ள 41 பேரில் 30 பேரே கலந்துகொண்டனர். இந்த நிலையில், கூட்டத்துக்கான அழைப்பிதழ் கிடைக்கப்பெறவில்லை என யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். தனக்கான அழைப்பிதழ் கிடைக்கப்பெறாமை தொடர்பில் கட்சியின் பதில் பொதுச் செயலர் ப.சத்தியலிங்கத்திடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## சஜித்தை...

வில்லை. அது தொடர்பில் கட்சியின் பதில் செயலருக்கு தெரியப்படுத்தியும் இருந்தேன். மத்திய குழுக் கூட்டத்தில் எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கவேண்டாம் எனவும், என்னுடன் கலந்துபேசிய பின்னரே இறுதி முடிவு எடுக்குமாறும் அறிவுறுத்தியிருந்தேன். இந்த நிலையில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக ஏன் முடிவு எடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை - என்றார். (அ-ஒ-26)

## ரணிலுக்காக...

வவுனியாவில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்துக்கு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரால் மக்கள் இருவேறு பேரணிகளாக அழைத்து வரப்பட்டுள்ளனர்.

குருமண்காட்டில் இருந்து இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தானின் ஆதரவாளர்கள் பேரணியாக ஜனாதிபதியின் பரப்புரை கூட்டம் நடைபெற்ற வைரவப் புளியங்குளம் மைதானத்தைச் சென்றடைந்திருந்தனர்.

சமநேரத்தில் வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் ஆதரவாளர்கள் பரப்புரைக் கூட்டம் இடம்பெறும் வைரவப்புளியங்குளம் மைதானத்தை நோக்கி பேரணியாக சென்றடைந்தனர்.

இதனால் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனவாதம் இல்லாத நாடே என் இலக்கு!

## அநுராதபுரத்தில் வைத்து சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப்.2
இனவாதத்தால் முழுநாடும் சீரழிந்து போனது. இனவாதத்தையும், மதவாதத்தையும், இனமத பேதங்களையும் ஊக்குவிக்கின்ற கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தே தீருவேன் என்று ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதா? நல்லடக்கம் செய்வதா? என்கின்ற பிரச்சினை எழுந்த போது எந்தத் தயக்கமும் இல்லாமல், முஸ்லிம்களின் மத நம்பிக்கையின்படி அடக்கம் செய்ய வேண்டும் என்று நாம் தெரிவித்தோம். முஸ்லிம்களுக்காக வீதிகளுக்கு இறங்கினோம்.

இனவாதத்தால் முழுநாடும் சீரழிந்து போனது. இனவாதத்தையும் மதவாதத்தையும், இனமத பேதங்களையும் ஊக்குவிக்கின்ற யுகத்தை இல்லாமற் செய்வோம். அனைத்து இன மக்களும் இந்த மோசமான அரசாங்கத்தினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற, வேதனையான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்ற சந்தர்ப்பத்தில் துன்பத்தைத் துறந்து கண்ணீரைத் துடைத்து சுபீட்சமான வாழ்க்கையை உருவாக்குகின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

செப்ரெம்பர் 21ஆம் திகதி உருவாக்கப்படுகின்ற ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக ஒரு பக்கத்திலிருந்து, இன்னும் ஒரு பக்கத்துக்கு கட்சி மாறுகின்ற முறையைத் தடைசெய்வோம். நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வரப்பிரசாதங்களை வழங்கி நிபந்தனைகளுக்காக உறுப்பினர்களை இணைத்துக்கொள்வதில்லை. கொள்கையின் அடிப்படையிலேயே இணைத்துக் கொள்வோம்- என்றார். (ம)

# பேசுபொருளாகவே நீதி!

**யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் ஆதங்கம்**

யாழ்ப்பாணம் , செப். 2

**போரின்போதும், போருக்கு முன்னரும் ஸ்ரீலங்கா அரச படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியானது இதுவரை பேசுபொருளாகவே இருக்கிறதே தவிர அதற்கான தீர்வுகளும் எட்டப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.**

-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சிந்துஜன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகிலேயே காணாமல் ஆக்கப்படுவது என்பது மிகப் பெரிய குற்றமாகும். தமது பிள்ளைகளுக்குஎன்னநடந்து என்று கூடத் தெரியாமல், தமது பிள்ளைகள் உயிரோடு வருவார்கள் என்ற ஏக்கத்துடன் பெற்றோர் கடந்த ஐந்து வருடங்களாக தமது போராட்ட வடிவங்களை மாற்றி மாற்றி தமது பிள்ளைகளின் படங்களோடு வீதி வீதியாகத் திரிகின்றனர்.

இந்தத் தாய்மார் தமது பிள்ளைகளைத் தேடித் தேடி இறந்துபோன வரலாற்றுச் சம்பவங்கள் காணப்படுகின்றன. இது ஒரு துயரச்சம்பவம், எனவே நீதியை நிலைநாட்டுவதற்கு சகல தரப்புகளும் முன்வரவேண்டும் - என்றார். (ஒ-27)



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாக சங்குச் சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேந்திரனுக்கு ஆதரவான பரப்புரை, அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் தலைமையில் உரும்பிராயில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (ச-45-27)



# ரணிலின் தேர்தல் அலுவலகம் திருகோணமலையில் திறப்பு

திருகோணமலை, செப்.2
ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து அவரது தேர்தல் கிளை அலுவலகம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரளவின் பங்கேற்புடன் திருகோணமலை அநுராதபுர சந்தியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ச-25)



# சஜித் காரியாலயம் மட்டுவிலில் திறப்பு!

சாவகச்சேரி, செப்.2
ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்டத்துக்கான பிரதான ஜனாதிபதித் தேர்தல் காரியாலயம் மட்டுவிலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சஜித் பிரேமதாஸவால் திறந்துவைக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ரி-27)



சாவகச்சேரி, வாரிவனேஸ்வர ஸ்ரீவெங்கடாசலபதி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது. (ச-9)



# தங்க இடப வாகனத்தில் நேற்று மாலை நல்லூரான்

யாழ்ப்பாணம், செப். 2
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட பெருந்திருவிழாவின் 24ஆம் நாள் மாலை உற்சவமான தேரடி உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது தங்க இடப வாகனத்தில் நல்லூர் வேற்பெருமான் அருட்காட்சி தந்தார். (ஒ-66)

# இரு தோழிகள் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, செப்.2
குருநாகல் -வெலிபென்னகஹமுல்ல பிரதேசத்தில் இரண்டு தோழிகள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டதாக வெலிபென்னகஹமுல்ல பொலிஸார் தெரிவித்தனர். 52 மற்றும் 49 வயதுடைய திருமணமாகாத இரண்டு தோழிகளே உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் 14 வருடகாலமாக தோழிகளாக இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

**வேலையாட்கள் தேவை**

இல. 194 யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பெண், வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு:
**077 116 8958**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்று மதில் மற்றும் பொளி கல்லு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
குடியிருப்புக்கு மிகவும் கௌரவ மானதும், பிரபல்ய மானதுமான இடம் என்பது குறிப்பிடத்தக்கது.
(CS/12341)-1

**T.P- 077 992 1536**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.